பகுதி I

1. பின்வருவனவற்றுள் எது உயிரிகளின் ஆட்சிநிரை ஒழுங்கமைப்புக்குரிய மட்டங்களில் மிகவும் எளியது

1. அணு 2. குடித்தொகை 3. கலம் 4. மூலக்கூறு 5. அங்கம்

2.உயிரங்கிகளில் வெப்பநிலை மாற்றங்களை நிதானப்படுத்துவதற்கு உதவும் நீரின் இயல்புகள் ?

1. உயர் ஓட்டற் பண்பு விசை, உயர் உருகலின் மறை வெப்பம்
2. உயர் தன்வெப்பக் கொள்ளளவு, உயர் ஆவியாதலின் மறைவெப்பம்
3. உயர் தன்வெப்பக் கொள்ளளவு, உயர் மேற்பரப்பிழுவிசை
4. உயர் உருகலின் மறைவெப்பம், உறையும் போது கனவளவு மிகையாக அதிகரித்தல்.
5. உயர் ஆவியாதலின் மறைவெப்பம், முனைவுத்தன்மை உடையதாக இருத்தல்.

3. உயிரங்கிகளில் சுவட்டு மூலகங்களின் பங்களிப்பு தொடர்பான பின்வரும் கூற்றுக்களில் சரியானது

1. கலங்களின் ஆக்கக் கூறு 2. அனுசேபத்தின் தாக்கி
3. நொதியத்தின் துணைக்காரணி 4. ஓமோன் கூறு 5. மயோகுளோபின் கூறு

4. பின்வரும் வெல்லங்கள் தொடர்பான இணைப்புச் சோடிகளில் **தவறானது** எது?

	பல்சக்கரைட்டு	**ஒருபகுதியம்**	**காணப்படும் இடம்**
1.	கிளைக்கோஜன்	குளுக்கோசு	ஈரல்
2.	பெக்ரின்	அயலுரோனிக்கமிலம்	தாவரக்கலச்சுவர் நடுமென்றட்டு
3.	கைற்றின்	குளுக்கே காசமின்	ஆத்ரபோடாக்களின் புறவன்கூடு
4.	அரைச்செலுலோசு	பென்ரோசு	தாவரக்கலச் சுவர்
5.	இனூலின்	பிரற்ரோசு	டாலியாவின் முகிழ்

5. பின்வருவனவற்றுள் எது இலிப்பிட்டு அல்லாதது

1. ரேர்ப்பின் 2. மெழுகு 3. கெரற்றின் 4. ஸ்ரொயிட்டு 5. ரைகிளிசரைட்டு

www.ikeou.lk

6. புரதங்களின் தொழில் தொடர்பான கூற்றுக்களில் **தவறானது** எது?

தொழில்	உதாரணம்
1. சேமிப்பு	கேசின்
2. ஓமோன்	இன்சுலின்
3. சுருங்கல்	அக்ரின்
4. எதிர்ப்பு	ஓவல்பியுமின்
5. ஊக்கி	தயலின்

7. முதலுருமென்சவ்வு தொடர்பான கூற்றுக்களில் **தவறானது**

1. பொஸ்போ இலிப்பிட்டு இரு படையில் அமைந்திருக்கும்
2. கலமொன்றின் பிரசாரணத்தைப் பேணும்
3. காபோவைதரேற்று கிளையமைப்பு மென்சவ்வின் இருபுறத்திலும் அமைந்திருக்கும்
4. முப்பரிமான கட்டமைப்பு உடையது
5. பாய்மசித்திர கட்டமைப்பு

8. கலமொன்றின் ஒடுக்கற்பிரிவு தொடர்பான நிகழ்வுகள் சில கீழே குறிப்பிடப்பட்டள்ளது

A. மையப்பாத்து பிளவடைதல் C. நிறமூர்த்தங்கள் கலப்படைதல்

B. குறுக்குப்பரிமாற்றம் D. நிறமூர்த்தங்கள் தன்வயத்தொகுப்படைதல்

E. இயல்பு ஒத்த நிறமூர்த்த சோடியாதல்

மேலே தரப்பட்ட கூற்றுக்களில் எது/எவை பாரம்பரிய மாறலை ஏற்படுத்தும்

1. A,B 2. C,B 3.B,D 4.D,E 5. B,E

9. பின்வரும் ATP தொடர்பாக கூற்றுக்களில் **தவறானது** எது?

1. ஒரு சித்திரிக்கமில வட்டத்தில் கீழ்ப்படை பொஸ்பரிலேற்றம் மூலம் 2 ATP உருவாகும்.
2. காற்றுச்சுவாசத்தில் அதிக எண்ணிக்கையான ATP உருவாக்கப்படும்.
3. ATP மூலக்கூறு C, H, O, N, P ஆகிய மூலகங்களை கொண்டது
4. உயிரியல் ஒளிர்வுக்கு ATP பயன்படுத்தப்படுகின்றது.
5. குளுக்கோஸ் பைருவிக்கமிலமாக மாற்றப்படுவதற்கு ATP பயன்படுவதில்லை

10. நொதியங்களின் சீராக்கல் தொழிற்பாடுகள் தொடர்பான கூற்றுக்களில் **தவறானது**

1. போட்டியற்ற நிரோதிகள் அலொஸ்டெரிக் சீராக்கல் மூலக்கூறுகளாகத் தொழிற்படும்
2. நொதியத் தொழிற்பாட்டு மையத்தின் வடிவம் சீராக்கலின் போது இழக்கப்படலாம்
3. அலொஸ்டெரிக் சீராக்கலின் போது நொதியத் தொழிற்பாடு ஊக்குவிக்கப்படலாம்
4. எப்போதும் ATP கிளைக்கோபகுப்பை ஊக்குவிக்கும்
5. அலொஸ்டெரிக் தாக்கம் ஊக்கி/ நிரோதிப்பை மேற்கொள்ளும்

www.ikedu.lk

11. ஒளித்தொகுப்பின் உறிஞ்சல் நிறமாலை
    1. ஒளி உறிஞ்சப்படும்போது நடைபெறும் ஒளித்தொகுப்பின் அளவைக் குறிக்கும்
    2. பிரதான நிறப்பொருட்களினால் மட்டும் ஒளி உறிஞ்ல் அளவை குறிக்கும்
    3. நிறப்பொருள் ஒன்று ஒளி உறிஞ்சும் அளவைக் குறிக்கும்
    4. நிறப்பொருள் ஒரு நாளில் வேறுபட்ட நேரங்களில் ஒளி உறிஞ்சும் அளவைக் குறிக்கும்
    5. தாவரங்களில் பகலில் ஒட்சிசன் வெளியேறும் அளவைக் குறிக்கும்

12. ஒளித்தொகுப்பின் ஒளியில் தங்கியிருக்கும் தாக்கம் தொடர்பான கூற்றுக்களில் **தவறானது**
    1. அது பகலில் மட்டும் நடைபெறும்
    2. அது பகலிலும் இரவிலும் நடைபெறும்
    3. அது ஒளிபொஸ்பொரிலேற்றம் நடைபெறும்
    4. அதில் எப்போது ATP ஒரு விளைவாகும்
    5. அதன் போது நீர் இரசாயனப் பிரிகையடையும்

13. C_4 தாவரங்களின் ஒளித்தொகுப்பு தொடர்பான கூற்றுக்களில் **தவறானது**
    1. இலைநடுவிழையம் , கட்டுமடல் கலம் இரண்டிலும் காபொட்சிலேற்றம் நடைபெறும்
    2. இலைநடுவிழையம் , கட்டுமடல் கலம் இரண்டிலும் புத்துயிர்ப்பு நடைபெறும்
    3. இலைநடுவிழையம், ,கட்டுமடல் கலம் இரண்டிலும் துணைநொதியத் தாழ்த்தல் நடைபெறும்
    4. இலைநடுவிழையம், கட்டுமடல் கலம் இரண்டிலும் குளுக்கோசு உற்பத்தியாகும்
    5. இலைநடுவிழையம், கட்டுமடல் கலம் இரண்டிலும் துணைநொதிய ஒட்சியேற்றம் நடைபெறும்

14. ஒரு குளுக்கோசு மூலக்கூறின் ஒட்சியேற்றபொஸ்பொரிலேற்ற கூற்றுக்களில் **தவறானது**
    1. இழைமணி முகட்டில் நடைபெறும்
    2. 28 ATP உற்பத்தியாகும்
    3. ஒட்சிசன் உள்ள போது மட்டும் நடைபெறும்
    4. காபொட்சி நீக்கலுடன் தொடர்புடையது
    5. துணைநொதியங்கள் ஒட்சியேற்றப்படும்

15. சுவாச ஈவு தொடர்பான கூற்றுக்களில் **தவறானது**
    1. காபோவைதரேற்றுக்களில் பெறுமானம் ஒன்று ஆகும்
    2. இலிப்பிட்டுக்களில் பெறுமானம் ஒன்றைவிட குறைவு
    3. புரதங்களில் பெறுமானம் ஒன்றைவிட அதிகம்
    4. சுவாசமானியைக் கொண்டு இதனைத் துணியலாம்
    5. முளைக்கும் வித்துக்கள் பயன்படுத்தப்படும்

www.ikeda.lk